உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குக் கோடை விடுமுறையை அனுபவிக்க அனுமதி வழங்கியதால் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன மாதிரி, அடுத்த ஆண்டிற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் நடைபெறுது. எல்லோரையும் போன்று, இவர்களும் கை வீசிக்கொண்டு வந்தால், அடுத்த ஆண்டு பணியைத் துவக்குவது கஷ்டமாக இருக்கும். ஆனல் விடுமுறை நேரத்தில் வேலை பார்க்க வேண்டியிருந்தால், மேல் அதிகாரிகளிடத்தில் முன்னலேயே உத்தரவு பெற்றுக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்புகளும், வசதிகளும் தரப்பட்டிருக்கின்றன. மேலும் அவர்கள் ஈட்டிய விடுப்பும் பெறலாமென்ற அளவுக்குச் செய்தால் தான் முடியும். இதிலே ஓரளவுக்குச் செலவு கூடுதல் ஆனலும், இது தாங்கிக்கொள்ளக்கூடிய செலவாகத்தான் இருக்கக்கூடும். ஆகவேதான் மறுபரிசீலனை செய்து இந்தச் சங்கடங்கள் தீரவும், பள்ளிகளின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவும் என்னென்ன மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை இந்தத் துறை மேற்கொள்ளுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

4. அரசாங்க உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கையை அளித்தல்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசாங்க உறுதி மொழிக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கையை தங்கள் அனுமதியுடன் அவைக்கு அளிக்கிறேன்.

5. அரசின் தீர்மானம்.

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1975–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 19–ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1975–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 19–ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.